
## குடிவரவாளர்கள், இனவாரியாக கருதப்படுவோர் மற்றும் தனித்த தாயின் குடும்பங்கள் குறித்த ஆபத்தைப் பெரிதும் எதிர்நோக்குகின்றனர்

கருத்துக் கணிப்புக்கு உள்ளான குடும்பங்கள் | ரொறொன்ரோ முழுவதிலும்




குடிவரவாளர்களாக இருந்தனர்




தனித்த ஒரு பெற்றவர் உள்ளதாக, ஏறக் குறைய எல்லாம் தனித்த தாயின் குடும்பங்களாக இருந்தன





பூர்வீக குடிமக்கள், ஆசிய நாட்டினர், ஆபிரிக்க நாட்டினர், அராபியர்/மத்தியகிழக்கு நாட்டினர், லத்தின் அமெரிக்கர் அத்துடன்/அல்லது கரிபியன் நாட்டினரின் வழித்தோன்றல்களாக இருந்தனர்

ரொறொன்ரோ முழுவதையும் எடுத்து இதனுடன் ஒப்பிடுகையில் பழையனவாக மாறிவரும் இக்கட்டிடங்களில் குடிவரவாளர்கள், இனவாரியாக கருதப்படுவோர் மற்றும் தனித்த தாயின் குடும்பங்கள் மிகவும் கூடுதலான எண்ணிக்கை செறிவில் காணப்படுகின்றனர்.

**குறைந்த வருமானக் குடும்பங்கள் எல்லாவற்றுக்கும் செலவுக்குக் கட்டுப்படியாகின்ற அதேசமயம் மரியாதையான வீட்டு வசதியைத் தேடிப்பெறுவது சிரமமான ஒரு காரியமாக உள்ளது.**

ஆயினும் குடிவரவாளர்கள், இனவாரியாக கருதப்படுவோர் மற்றும் தனித்த தாயின் குடும்பங்கள் வீட்டுவசதி மற்றும் வேலைவாய்ப்பு விடயங்களில் உயர்மட்ட அளவில் பாரபட்சத்தையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.



நீங்கள் வாழும் அடுக்கு மாடிக் குடியிருப்பு **நெருக்கமானதாக, செலவுக்குக் கட்டுப்படி ஆகாத ஒன்றாக, பாதுகாப்பு அற்றதாக, நலிந்த நிலையில் உள்ளதாக அத்துடன் திருத்த வேலை தேவைப்படுவதாக** இருக்குமானால், அல்லது உங்கள் **குடியிருப்பில் இருந்து வெளியேற்றப்படும் ஆபத்தினை நீங்கள் எதிர்நோக்கினால்** நீங்கள் உதவியற்றுத் தனியே விடப்படுவதில்லை!

பின்வரும் சேவை அமைப்புக்கள் உங்களுக்கு உதவ முடியும். இவற்றில் பல வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு வசதியையும் வழங்குகின்றன.



## வீட்டுவசதிப் பிரச்சினை ஒன்றுபற்றிக் கதைப்பதற்கு யாரை நீங்கள் அழைக்கலாம்

### TORONTO RENT BANK
(செலுத்தப்படாத வாடகையைக் கட்டுவதில் உதவி பெறுவதற்கு)
416-924-2543

### TENANT HOTLINE
(வாடகைக் குடியிருப்பாளர் என்ற முறையில் உங்கள் உரிமைகள் பற்றிய தகவல் பெறுவதற்கு)
416-921-9494

### CENTRAL FAMILY INTAKE
(புகலிடம் தேவைப்படும் குடும்பங்களுக்கு உதவுவது)
416-397-5637

### CENTRE FOR EQUALITY RIGHTS IN ACCOMMODATION
(குடியிருப்பில் இருந்து வெளியேற்றப்படும் ஆபத்து உடைய வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உதவுதற்கும் வீட்டு வசதி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுதல் பற்றி அறிவிப்பதற்கும்)
416-944-0087

### TORONTO MUNICIPAL LICENSING AND STANDARDS
(உங்கள் குடியிருப்பில் அல்லது கட்டிடத்தின் பேணல் அல்லது நிலைமைகள் பற்றி முறைப்பாடு பதிவதற்கு)
311 or 416-392-2489

### HOUSING CONNECTIONS
(வாடகைத் துணையுதவியுடன் கூடிய வீட்டுவசதிக்கு விண்ணப்பம் செய்வதற்கு அல்லது உங்கள் விண்ணப்பத்தினைப் புதுப்பிப்பதற்கு)
416-981-6111

### LANDLORD AND TENANT BOARD
(ஒரு வாடகைக் குடியிருப்பாளர் என்ற முறையில் உங்களுக்கு உள்ள உரிமைகளை உங்கள் வீட்டு உரிமையாளர் மீறுவது பற்றி முறைப்பாடு பதிவதற்கு)
416-645-8080


**ஏற்றுக்கொள்ளும் கூற்று**

இத்தகவல் சுருக்கம் பின்வரும் அறிக்கையின் அடிப்படையில் அமைந்து உள்ளது:
*Nowhere Else to Go: Inadequate Housing and Risk of Homelessness Among Families in Toronto's Aging Rental Buildings,* ஆக்கியோர்: *Emily Paradis, Ruth Wilson* மற்றும் *Jennifer Logan*
முழுவடிவில் இந்த அறிக்கையை வாசிப்பதற்கான இணையத் தளம்:
*http://neighbourhoodchange.ca/2014/03/11/inadequate-housing-toronto-rental-buildings/*

*Social Sciences and Humanities Research Council of Canada* அமைப்பின் நிதியுதவியுடன் இத்திட்டம் நிகழுகிறது. இச்சிறு பிரசுரத்தின் உள்ளடக்கம் நிதியுதவி வழங்கும் அமைப்பின் கருத்தினை பிரதிபலிப்பதாகக் கருதமுடியாது.


# ரொறொன்ரோவில் வாடகைக்கு விடப்படும் உயர்மாடிக் கட்டிடங்களில் உள்ள குடும்பங்கள், அவர்களின் வீட்டுவசதி மற்றும் வீடில்லா நிலைமையை எதிர்நோக்கும் ஆபத்து

பழையனவாக மாறிவரும் தொடர்மாடிக் கட்டிடங்களில் உள்ள பத்தில் ஒன்பது குடும்பங்களுக்குப் **பாரதூரமான வீட்டுவசதிப் பிரச்சினை** உள்ளது.



ரொறொன்ரோவில் உள்ள குடும்பங்களுக்குத் தேவைப்படும் வீட்டுவசதி இவ்வாறு அமைதல் அவசியம்:



செலவுக்குக் கட்டுப்படியானது, பாதுகாப்பானது, பொருத்தமானது,



காவல் வசதியுடையது மற்றும் நல்ல நிலையில் இருப்பது.

NEIGHBOURHOOD CHANGE Research Partnership
www.neighbourhoodchange.ca


## ரொறொன்ரோவில் பழையனவாக மாறிவரும் வாடகைக் குடியிருப்புக் கட்டிடங்களில் வாழும் 1500 இலும் அதிகமான குடும்பங்கள் மத்தியில் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் மூலம் பின்வருவன தெரியவந்துள்ளன:




- **2** குடும்பங்களில் **1 இடநெருக்கமான** குடியிருப்புகளில் வாழுகின்றனர்
- **2** குடும்பங்களில் **1 பழுதடைந்த நிலைக்** கட்டிடங்களில் வாழுகின்றனர்
- **3** குடும்பங்களில் **1** தமது வருமானத்தின் பாதிக்கு மேலான தொகையை **செலவுக்குக் கட்டுப்படி ஆகாத** வாடகையில் செலவிடுகின்றனர்
- **4** குடும்பங்களில் **1** இன் குடியிருப்புக்குப் **பல திருத்த வேலைகள்** தேவைப்படுகின்றன.
- **4** குடும்பங்களில் **1** தமது இல்லங்களில் **பாதுகாப்பு இல்லாமையை உணர்கின்றனர்.**
- **5** குடும்பங்களில் **1** வாடகை செலுத்தத் தவறியதனால் **வெளியேற்றப்படும் ஆபத்தில்** உள்ளனர்.

**முழு நிலைமையினையும் பார்க்கும்பொழுது, 10 குடும்பங்களில் 9 இவ்வாறான பிரச்சினைகளில் குறைந்த பட்சம் ஒன்றையாவது தமது வீட்டு வசதி விடயத்தில் கொண்டு இருக்கின்றனர்.**

பல குடும்பங்களுக்கு வீட்டு வசதிப் பிரச்சினைகள் பல வகையில் உள்ளன. மொத்தக் குடும்பங்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு மூன்று அல்லது அதனிலும் கூடிய விடயங்களில் வீட்டுவசதிப் பிரச்சினைகள் உண்டு.




### கல்வியோ அல்லது செய்யும் தொழிலோ குடும்பங்களைப் பாதுகாக்க முடிவதில்லை.

கருத்துக் கணிப்பில் பங்குபற்றிய குடும்பங்களில் 3 இல் 2 குடும்பங்கள் தமது வருமானத்தை பெறுவதற்குத் தாம் செய்யும் தொழிலே பிரதான வழியாக இருந்தது எனக் கூறினர். அத்துடன், இவர்களில் பாதிப் பங்கிலும் கூடியவர்கள் கல்லூரி அல்லது பல்கலைக்கழகக் கல்வி பெற்றிருந்தனர்.

இவையெல்லாம் இருந்தும் கூட இவர்களில் **70%** அளவிலும் கூடியவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வருமானத்தைப் பெற்று வந்தனர்.

## பல குடும்பங்கள் வீடில்லா நிலைமைக்குத் தள்ளப்படும் ஆபத்தில் உள்ளனர்

வீட்டு வசதி தொடர்பாக எந்த அளவு கூடுதலான பிரச்சினைகள் ஒரு குடும்பத்துக்கு உள்ளனவோ, அந்த அளவுக்கு அவர்கள் வீடில்லா நிலைமைக்குத் தள்ளப்படும் ஆபத்தும் உயர்வாக உள்ளது. குடும்பங்கள் தமது வீட்டு வசதியினை இழக்கும் பொழுது அவர்கள் புகலிடங்களுக்கு மிக அரிதாகவே செல்கின்றனர். பதிலாக, அவர்கள் வேறு குடும்பங்களுடன் சேர்ந்து வாழுவதற்கு முற்படுவர். பெரும்பாலும் இவ்விடங்களில் இடநெருக்கமான நிலைமைகள் இருக்கும். வீடில்லா நிலைமைக்குத் தள்ளப்பட்ட குடும்பங்கள் தமக்கென்று வாழுவதற்கு புதிய ஓர் இடத்தைப் பெறுவதில் உள்ள கஷ்டம் அதிகரித்துக் கொண்டு போகிறது.



**பொருத்தமான வீட்டுவசதியைப் பெறுதல் ஒரு மனித உரிமை ஆகும். இந்த உரிமையை மக்கள் அடையும்படி உறுதி செய்வது எல்லா மட்டங்களிலும் உள்ள அரசுகளின் ஒரு கடமை ஆகும்.**

குடும்பங்கள் ஏற்கெனவே தம்மால் இயன்றதை மிகச் சிறப்பாகச் செய்கின்றனர். உதாரணம்: தமது வாடகையைச் செலுத்துதல், தமது அயலவர்களுக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் வலுக் கொண்ட, உயிர்த் துடிப்புள்ள அயலிடப் பகுதிகளை உருவாக்குதல்

கனடா, ஒன்ராறியோ, ரொறொன்ரோ பிரதேசங்களுக்கான அரசுகள் இங்குள்ள குடும்பங்களின் வீட்டு வசதி நிலைமைகளை முன்னேற்றவும், குடும்பங்கள் மத்தியில் வீடில்லா நிலைமை உண்டாகாமல் தடுக்கவும் உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு முடியும். பின்வரும் நான்கு நடவடிக்கைகளை எமக்காக எடுக்கும்படி எமது அரசுகளிடம் நாங்கள் வேண்டிக் கொள்ள முடியும்:

1. கனடா அரசாங்கம் செலவுக்குக் கட்டுப்படியாகும் வீட்டு வசதி மக்களுக்குக் கிடைப்பதை அதிகரிப்பதற்கான ஒரு தேசிய திட்டத்தை உருவாக்கி, அதற்கு நிதியுதவி வழங்க முடியும். வீட்டுவசதிக்காக வழங்கப்படும் துணையுதவித் தொகைகளைக் குறைப்பதற்குப் பதிலாக அவற்றை அரசாங்கம் கூட்டுவதற்கும் முடியும்.
2. ஒன்ராறியோ மாகாண அரசு குறைந்தபட்ச சம்பளத்தையும் சமூக உதவித் தொகை வீதங்களையும் அதிகரிப்பதன் மூலம் குடும்பங்களின் வருமானங்களை உயர்த்த முடியும். குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு அரசாங்கம் வீட்டு வசதி சார்ந்த நன்மை வழங்கும் ஓர் ஏற்பாட்டினையும் செய்து கொடுக்க முடியும்.
3. ஒன்ராறியோ மாகாண அரசும் ரொறொன்ரோ நகராட்சியும் புதிதாக ஆரம்பிக்கப்படும் குடியிருப்பு அபிவிருத்தித் திட்டங்களில் செலவுக்குக் கட்டுப்படியாகும் குடியிருப்பு அலகுகளும் அடங்கி இருக்கவேண்டும் என்று விதிப்பதன் மூலம் செலவுக்குக் கட்டுப்படியாகும் புதிய வீட்டு வசதி இடங்கள் கிடைப்பதை அதிகரிக்க முடியும்.
4. ரொறொன்ரோ நகர நிர்வாகம் கட்டிடங்கள் சார்ந்த நியமங்களை நகரத்தில் உறுதியாக நடைமுறைப்படுத்தவும், வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றிய தகவலினை வழங்க உதவுதற்கும் முடியும்.

